**அசல்வழக்கு எண். OS.75 /2021- PW1 .**

**திரு.நவராஜ் த/பெ.ஜேசுதாசன்**

**நாள்:29.10.2025.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பில் :**

பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி எனது பள்ளியில் தான் படித்தார். பிரதிவாதிக்கு தாவா சொத்து எப்படி வந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் பிரதிவாதிக்கு தானப்பத்திரப்படி வந்ததாக சொன்னார். அந்த தானபத்திரத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். பிரதிவாதிக்கு அந்த தான பத்திரம் யார் எழுதி கொடுத்தது என்றால் அவர் அப்பா எழுதி கொடுத்தது ஆகும். அது எந்த வருடத்தில் எழுதி கொடுத்தது என்றால் அது தெரியாது. தாவா கிரய ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 28.10.2015 ல் எழுதப்பட்டது. கிரய தொகை எவ்வளவுக்கு பேசப்பட்டது என்றால் ரூ.2,50,000 ஆகும். ஒப்பந்த தேதியில் எவ்வளவு முன் பணம் கொடுக்கப்ட்டது என்றால் ரூ.2,00,000 கொடுக்கப்பட்டது. பாக்கி கிரய தொகை எவ்வளவு நாளுக்குள் கொடுக்க வேண்டும் என்று காலகெடுப்போடப்பட்டுள்ளது என்றால் அது போடப்படவில்லை. பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் கிரய ஒப்பந்தம் போடவில்லை என்றும் அவர் என்னிடம் வாங்கிய கடனுக்கு பொறுப்புறுதிக்காக தான் ஒப்பந்தம் போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண்.2748 ஆகும். தாவா சொத்தின் விஸ்திரணம் எவ்வளவு என்றால் 6 க்கு 10 ½ அடி ஆகும். தாவா சொத்திற்கு நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. யார்யார் ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறார்கள் என்றால் எனது பக்கத்தில் பஞ்சாயத்து தலைவர் மாரிமுத்து சாட்சி கையெழுத்து போட்டார். பிரதிவாதி பக்கத்தில் ஒருவர் சாட்சி கையெழுத்து போட்டார் அவர் பெயர் தெரியாது. மாரிமுத்து அப்பா பெயர் தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் பிரதிவாதிக்கு எப்போது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 2016 ம் ஆணடில் அனுப்பினேன். தேதி, மாதம் ஞாபகம்

இல்லை. அந்த அறிவிப்பை பிரதிவாதியே பெற்றுக்கொண்டரா என்றால் ஆமாம். அந்த அறிவிப்பை பிரதிவாதி வாங்கவில்லை என்றும் பிரதிவாதியின் தகப்பனார் தான் வாங்கினார் என்றும் அந்த விவரத்தை நான் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் தான் வாங்கியிருக்கிறார் என்றும் சொத்தை விற்பனை செய்வதற்காக கிரய ஒப்பந்தம் போடவில்லை என்றும் அதனால் தான் எனக்கு சர்வே எண் மற்றும் சொத்து விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./— எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.